**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.45/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-4 |
| Name | : | சங்கீதபிரியதர்ஷினி, வயது 22 |
| Father Name/Husband Name | : | பெரியசாமி |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | டி.வி.எஸ் ஷோரூமில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து டி.வி.எஸ் ஷோரூமில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது, தற்போது தான் தெரியும். அ.சா.1 எனது தம்பி. விபத்தில் இறந்த நபர் எனது அப்பா. கடந்த 20.05.2023 ஆம் தேதி இரவு 09.00 மணியளவில் எனது தம்பி அ.சா.1 எனக்கு போன் செய்து எனது தம்பியும், பூமணியும் கழுகுமலை ஆஞ்சநேயர் கோவில் அருகே நடந்து வந்த போது அவர்களுக்கு முன்னர் பெரியசாமி நடந்து சென்று கொண்டிருந்ததாகவும் அப்போது வடக்கில் இருந்து தெற்காக ஸ்பிலண்டர் இருச்சக்கர வாகனத்தில் வந்த எதிரி மோதிவிட்டதாகவும் அதில் மல்லாக்க விழுந்ததில் பின் தலையில் காயம் ஏற்பட்டுமூக்கின் வழியாக இரத்தம் வந்ததாகவும் எனது தம்பியும் பூமணியும் பெரியசாமியை கழுகுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாகவும் கூறினார்.
2. பின்னர் எனது அம்மா கழுகுமலை அரசு மருத்துமனைக்கு கிளம்பி சென்றார். அங்கு அவரை பார்க்க முடியாததால் அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். இது பற்றி நான் என் அம்மாவிடம் போன் மூலம் தகவல் கேட்ட போது அவர் மூச்சு பேச்சின்றி இருப்பதாக சொன்னார். பின்னர் 21.05.2023 ஆம் தேதி இரவு 08.20 மணிக்கு இறந்துவிட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார்கள்.
3. பின்னர் நேரில் சென்று பார்த்த போது என் அப்பாவின் உடல் மீது பிரேத விசாரணை செய்தார்கள், அப்போது உடன் இருந்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் அ.சா.1 சம்பவம் சம்பந்தமாக எதிரி சம்பந்தமாகவோ நீங்கள் தகவல் கேட்டு பெற்றதாக சொல்வது பொய்

என்றால் சரியல்ல. பெரியசாமி இறந்தது சம்பந்தமாகவோ பிரேத விசாரணை சம்பந்தமாக நீங்கள் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. இறந்த நபர் உங்கள் அப்பா என்பதால் செவி வழி செய்தி சாட்சியாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.